# சத்திய வசனம்

## வானொலி நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்படும்

# பாடல்கள்



BACK TO THE BIBLE BROADCAST, Ceylon.

# அட்டவணை


| | | பக்கம் | எண் |
|---|---|---|---|
| 1 | அத்திமரம் துளிர்விடாமற் | 8 ... | 15 |
| 2 | அலைந்தேன் உலகிலே | 4 ... | 8 |
| 3 | அல்லேலூயா கர்த்தரையே | 24 ... | 44 |
| 4 | அழைக்கும் தெய்வம் | 27 ... | 50 |
| 5 | அழைப்பது நான் உந்தன் | 12 ... | 23 |
| 6 | அன்பின் இயேசு | 3 ... | 5 |
| 7 | அன்பின் கருணை வடிவே | 21 ... | 39 |
| 8 | அன்புருவானவராம் | 11 ... | 21 |
| 9 | ஆத்துமமே என் முழு உள்ளமே | 34 ... | 63 |
| 10 | ஆவியை அருளுமே சுவாமி | 28 ... | 52 |
| 11 | ஆனந்தமாய் இன்பக் கானான் | 32 ... | 60 |
| 12 | இயேசுவின் அன்புதான் | 37 ... | 70 |
| 13 | இயேசுவுக்கே ஒப்புவித்தேன் | 30 ... | 56 |
| 14 | இருள் சூழும் காலம் | 25 ... | 47 |
| 15 | இறைவா! எனக்கோர் | 22 ... | 41 |
| 16 | இன்பாலய மணியோசை | 13 ... | 26 |
| 17 | எந்தன் அன்பராம் | 19 ... | 36 |
| 18 | என் தேவா | 17 ... | 32 |
| 19 | என் நேசரின் அன்பை | 16 ... | 30 |
| 20 | என் மகனே! | 6 ... | 11 |
| 21 | என்னை மறவா | 31 ... | 57 |
| 22 | ஏனிந்த பாடுதான் | 25 ... | 46 |
| 23 | ஐயையா நான் வந்தேன் | 33 ... | 62 |
| 24 | காதுகுளிரப் பாடுங்கள் | 35 ... | 66 |
| 25 | கானகப் பாதை | 23 ... | 42 |
| 26 | குருசினில் தொங்கிய | 11 ... | 22 |
| 27 | குருசினில் தொங்கியே | 30 ... | 55 |
| 28 | குருவே உந்தன் | 38 ... | 71 |
| 29 | கேளுங்கள் கொடுக்கப்படும் | 10 ... | 20 |
| 30 | கொல்கொதா மலையில் | 5 ... | 10 |
| 31 | சிலுவை மரம் | 13 ... | 25 |
| 32 | திருப்பாதம் நம்பி வந்தேன் | 26 ... | 48 |
| 33 | தீங்குநாட்கள் வருமுன்னமும் | 6 ... | 12 |
| 34 | தேவா பாலா | 2 ... | 3 |
| 35 | தேவா பிரசன்னம் தாருமே | 31 ... | 58 |

| | | பக்கம் | எண் |
|---|---|---|---|
| 36 | தேவாதி தேவன் | 35 ... | 65 |
| 37 | தொழுகிறோம் எங்கள் | 34 ... | 64 |
| 38 | நமது இயேசுகிறிஸ்துவின் நாமம் | 26 ... | 49 |
| 39 | நிச்சயம் முடிவு உண்டு | 8 ... | 16 |
| 40 | நெஞ்சமே வீணாய் | 27 ... | 51 |
| 41 | நெஞ்சம் குமுறுதே | 1 ... | 2 |
| 42 | பல்லாண்டு எம்மை | 2 ... | 4 |
| 43 | பாடும் மாந்தரே | 18 ... | 34 |
| 44 | பாரில் வந்த கோமானே | 9 ... | 17 |
| 45 | பார்த்தேன் சொரூபனே | 18 ... | 33 |
| 46 | பாவம் தீர்க்க வந்தேன் | 9 ... | 18 |
| 47 | பாவி நான் என்னை | 29 ... | 53 |
| 48 | பாவிக்கு புகலிடம் | 33 ... | 61 |
| 49 | பாவியாகவே வாரேன் | 24 ... | 45 |
| 50 | பிணவுண்ட மலையே | 36 ... | 67 |
| 51 | பிறந்தாரே இயேசு | 20 ... | 37 |
| 52 | பூமியின் குடிகளே | 20 ... | 38 |
| 53 | பெத்லகேம் நாட்டின் | 7 ... | 14 |
| 54 | போற்றுவோம் பாலனை | 19 ... | 35 |
| 55 | மன்னித்துவிட்டாரே | 4 ... | 7 |
| 56 | மாமலை மீதிலே | 22 ... | 40 |
| 57 | மானிடர்க்காக உலகத்தில் | 14 ... | 28 |
| 58 | முள்ளுள்ள புதர்களின் | 7 ... | 13 |
| 59 | யோர்தானைக் கடக்கும் | 14 ... | 27 |
| 60 | ராஜாதி ராஜன் | 10 ... | 19 |
| 61 | வரவேண்டும் பரவினுவே | 36 ... | 68 |
| 62 | வருத்தப்பட்டுப் பாரஞ் | 12 ... | 24 |
| 63 | வல்லவரே இயேசு நல்லவரே | 37 ... | 69 |
| 64 | வா பாவி மலைத்து | 29 ... | 54 |
| 65 | வாரத்தின் முதல்நாள் | 3 ... | 6 |
| 66 | வாலிபரே! வாலிபரே!! | 5 ... | 9 |
| 67 | வாலிபனே உன் வாலிப | 1 ... | 1 |
| 68 | வாலிபன் தன் வழியை | 15 ... | 29 |
| 69 | வாழ்வை அளிக்கும் | 23 ... | 43 |
| 70 | ஜீவ நதிக் கரை ஓரத்திலே | 16 ... | 31 |
| 71 | ஜெபத்தைக் கேட்கும் | 32 ... | 59 |

1

பல்லவி

வாலிபனே! உன் வாலிப வயதில் சிருஷ்டி கர்த்தரை நினை!

அனுபல்லவி

வாலிபம் போய்விடும் வயோதிபமாகிடும்
காலமோ குறுகியது ......வாலிபனே

சரணங்கள்

1. பாசி படிந்த நிலத்தில் நடப்பது
வாலிபப் பருவத்திலே
நாம் எங்கே எப்போது எப்படி விழுவோம்
என்பது தெரியாது—இங்கு
யாருக்கும் புரியாது ......வாலிபனே

2. நாகரீகம் என்ற பாழும் உலகில்
நயந்து வாழ்பவனே
உன்னை உலகிற்கு ஒளியாய் ஜீவிக்க இன்று
இயேசு அழைக்கிறாரே—உன்னை
அன்புடன் அழைக்கிறாரே ......வாலிபனே

3. காணமற் போன ஆடாய் இன்று
உலகில் வாழ்பவனே
உன்னை கிறிஸ்து இயேசு மந்தையிற் சேர்க்க
அன்புடன் அழைக்கிறாரே—நீ
இன்றே வந்திடுவாய் ......வாலிபனே

2

பல்லவி

நெஞ்சம் குமுறுதே வேதனை சூழுதே
தியாகி உன் வடிவம் இதோ?—உத்தன்
அஞ்சிடும் கண்ணில் பொங்கிடும் கண்ணீரும்
தெரியுதே எனக்காகவோ? //

சரணங்கள்

1. குயவன் கை களி மண் பொருளாவதுபோல்
என்னையும் உருவாக்குமே!—உத்தன்
துயர் பாடுகள் யாவும் என் பாவம் நீக்கி
அணைத்திடும் எந்நாளுமே //

2. நீற்கு மிகும் நாட்கள் நெருங்கிடுதே என்னை
இரட்சகா கண்பாருமே!—இந்த
மண்ணுனது என்னை மண்ணிற்கே அழைக்குமுன்
ஏழையென் குறைதீருமே ////

# 3

பல்லவி

தேவா! பாலா! பூவில் பிறந்தாய்!

அனுபல்லவி

ப வியான என்னை மீட்பதற்காய்
சிலுவை தொங்கி மரித்து வாழ்வளித்தாய்! ...தேவா

சரணங்கள்

1. முள்ளின் முடியை எனக்காய்த் தரித்தாய்!
பாவி பொற் கிரீடம் பெறவே நீ பிறந்தாய்! ...தேவா
2. வாரினால் அடித்து வாதைகள் பட்டாய்!
பாவி என் அடிகளை ஏற்கவே பிறந்தாய் ...தேவா
3. கல்வாரி மலையில் கள்வர் மத்தியிலே,
பாவி என் பேரில் நீ தொங்கவே பிறந்தாய்! ...தேவா

# 4

1. பல்லாண்டு எம்மைப் பாதுகாத்த
பண்புள்ள எம் தயாபரனே!
பற்றோடு உம் பாதத்தண்டையில்
பணிந்து உம்மைத் துதி செய்கின்றோம்.

பல்லவி

இயேசுவே எங்கள் தேவனே
வல்லமையின் மகிமையின் ராஜனே
நன்றியோடும்மைத் துதிக்கின்றோம் //

2. சோதனை வேதனை நேரத்தில்
என் கண்ணீர் துடைத்தீரே
அன்பின் கரத்தினாலே
அரவணைத்தெம்மைக் காத்தீரே ......இயேசுவே
3. இப்புதிய ஆண்டதனில்
பக்கத்துணையாக எம்மருகில்
சுக சந்தோஷ சமாதானத்தை
தந்தெமக்கு ஆசீர்வதியும் ......இயேசுவே

5

1. அன்பின் யேசு தந்தையே
அன்னை போல் எம் காவலே
துன்பம் நீக்கும் சொரூபியே
எம்மை உமக்களித்தோம்! ......அன்பின்

2. திசை மறந்தோம் காட்டினாய்
பசிக்கு உணவை ஊட்டினாய்
துணை இழந்தோம் தேற்றினாய்
எம்மை எடுத்துக்கொள்வாய்! ......அன்பின்

3. சிலுவை மரத்தில் தொங்கினாய்
உலகின் பாவம் கழுவினாய்
என்றும் வாழ வழி செய்தாய்
எம்மை எடுத்துக்கொள்வாய்!

---

6

பல்லவி

வாரத்தின் முதல் நாள் அதிகாலையிலே
காரிருள் கிழித்து தூயன் உயிர்த்தாரே!

சரணங்கள்

1. பெரும் பாறை மூடின குகையோ
போர் வீரர்களின் காவல் மிகையோ
பாவ மானிடரின் வாழ்வுப்பகையோ
அதை உடைத்தெறிந்தே அன்று உயிர்த்தெழுந்தார்
......வாரத்தின்

2. எம் பாவம் போக்கவே பிறந்தார்
எம் வாழ்வைச் சுவைத்திடவே வளர்ந்தார்
பெரும் பாடுகளைத் தன்மேல் சுமந்தார்
அன்று உயிர்த்தெழுந்தே என்றும் வாழவைத்தார்
......வாரத்தின்

3. நல்மேய்ப்பன் போலவே அணைத்தார்
தம் மந்தைக்காகவே தன்னை அளித்தார்
ஓ! மூடின கல்லறையுள் புகுந்தார்
மூன்று நாளைக்குள்ளே சாவின் கூரொடித்தார்
......வாரத்தின்

---

7

பல்லவி

மன்னித்துவிட்டாரே என் பாவங்கள் யாவையையும்
நாளுக்குநாள் நம்மை அன்புடனே—அவர்
பாதுகாத்தாரே //

சரணங்கள்

1. ஆலயமணியின் ஓசையிலே உள்ளங்கள் உருகுதையா—நீர்
சிந்திய இரத்தம் மனித குலத்துக்கு
ஆறுதல் அளிக்குதையா // ......இயேசு மன்னித்து

2. காணாத இடம் தேடி அலைபவனே கண்டாயா இரட்
சகரை—அவர்
மாறாத அன்பு உந்தனின் வாழ்வை
மாற்றிடும் புதிதாக // ......இயேசு மன்னித்து

3. இரட்சிப்பை உலகில் தந்தவரே இரட்சிக்க வல்லவரே
புதிதான உள்ளங்கள் உம்மிடம் வந்திடும்
நன்னாள் இதுவன்றோ // ......இயேசு மன்னித்து

---

8

அலைந்தேன் உலகிலே அறியாத இடந்தேடி
நல்ல நேசராக எம்மை மீட்டீரே

பல்லவி

பாதை தெரியாத ஆட்டைப்போல
அலைந்தேன் உலகிலே
நல்ல நேசராக வந்து எம்மை மீட்டீரே //

சரணங்கள்

1. கலங்கினேன் என்னை நீ தேற்றினாய்
பதறினேன் என்னை நீ பார்த்தாய்
கல்வாரியில் உன்னைக் கண்டேன்
பாதம் நோக நீ நடந்தாய் ......பாதை

2. கல்வாரி இயேசு நாதா
என்னையும் உம் தொண்டனாக்கும்
நேசத்தோடு நான் சேவை
செய்ய உம் ஆவியைத் தாரும் ......பாதை

---

## 9

வாலிபரே! வாலிபரே!! வாலிபரே!!!

பல்லவி

வாலிபரே வாலிபரே—உன்
காலமெல்லாம் நீ என்ன செய்தாய்? //

சரணங்கள்

1. கோடாகோடி மக்கள் வாழும்
இவ்வுலகில் உனக்கென்ன பங்கு?
சொல்லிடுவாய் நற்செய்தியை
பாரெங்குமுள்ள மாந்தருக்கு // ......வாலிபரே

2. கஷ்டப்படுவோர் எத்தனை கோடி
கவலைப்படுவோர் கலங்கிடுவோர்
பயப்படாதே பரமன் யேசு
வந்திடுவார் வெகு சீக்கிரத்தில் // ......வாலிபரே

3. பாருக்குள்ளே உனக்கு நல்ல
நண்பர் யாரும் இல்லையன்றோ?
உத்தம நண்பன் இயேசு நாதன்
இரட்சிக்க வல்ல நண்பனுமே // ......வாலிபரே

## 10

பல்லவி

கொல்கொதா மலையில் சிலுவை சுமந்தவரே! /

சரணங்கள்

1. ஜெபிக்கக் கற்றுத் தந்தீர்—அன்பாய்
நேசிக்க சொல்லித் தந்தீர்
நோய் துன்பம் நீக்கி இன்புடன் வாழ
வழி பல வகுத்தீரே // ......கொல்கொதா

2. செய்நன்றி மறந்துவிட்ட—இம்
மாநில மாந்தர்களே
சிலுவையில் ஏற்றி, ஏளனம் செய்தே
நன்றி மறந்தனரே // ......கொல்கொதா

3. பாடுகள் பட்டீரையா—கொடும்
பாவி என்னை மீட்க
வாரால் அடிபட்டு வதை பல ஏற்று
என்னை மீட்டீரையா // ......கொல்கொதா

## 11

பல்லவி

என் மகனே! என் மகனே
உன் தகப்பன் புத்தியைக் கேள்!
தள்ளாதே, உன் தாயின் போதகத்தை!

சரணங்கள்

1. ஞானத்தைப் பேணிக்கொள்வாய்—நல்
புத்தியைத் தேடிக்கொள்வாய்
நீ செல்கின்ற பாதை நல்லதோ என்று
அறிந்திடும் சக்தி உண்டோ? ......என்

2. கர்த்தர்க்குப் பயப்படுதல்—அது
ஞானத்தின் தொடக்கமன்றோ?
மூடர் ஞானத்தையும் போதகத்தையும்
அசட்டை பண்ணுகிறார்கள் ......என்

3. பெற்றோரின் புத்திமதி—உன்
சிரசுக்கு அலங்காரம்
கழுத்துக்குச் சரப்பணி யாகவே அமையும்
மறவார் உன்னை என்றும் ......என் (நீதி. 1)

## 12

1. தீங்கு நாட்கள் வருமுன்னமும்
எனக்கற்ற காலங்கள் வருமுன்னமும்
சூரியனும் சந்திரனும்
ஒளியிழந்து போகும் காலத்தின் முன்!

பல்லவி

வாலிபப் பிராயத்தில் சிருஷ்டிகரை
வாலிபப் பிராயத்தில் அவரை நினை!

2. மேட்டுக்காக பயமுண்டாகி
வழியிலே பயங்கள் தோன்று முன்னும்
வாதுமை மரம் பூப்பூத்து
உணவும் இல்லாமல் போகுமுன்னும் ......வாலிபப்

3. நித்தியத்திற்கு நீ போவதினால்
துக்கிப்போர் வீதியிற் திரியுமுன்னும்
ஊற்றருகே சால் உடைந்து
இதயம் நொருங்கிப் போகு முன்னும் ......வாலிபப்
(பிரசங்கி 12)

## 13

1. முள்ளுள்ள புதர்களின் மத்தியில்
ஒரு ரோஜா புஷ்பம் போலவே
மா சௌந்தரிய மானவரே
இயேசு நாதனே, எம் தேவனே!

பல்லவி

வாழ்த்துவோம் எங்கள் தேவனை
ஜீவ நாட்களிலும் மறு யாத்திரையிலும்
நன்றியோடே நாம் பாடிடுவோம்

2. இதயம் வெம்பி கசந்து நொந்து
மனகிலேசம் அடைந்திடுங்கால்
மனப்புண்ணில் எண்ணை தடவி
மனஆறுதல் தந்திடுவார் ......வாழ்த்துவோம்

3. தந்தை தாயும் என் சொந்தமானோரும்
கைவிட்டாலும் அவர் மாறிடார்
துன்பத்தில் எம்மை தாங்கிடுவார்
இன்பங்கள் எமக் கீந்திடுவார் ......வாழ்த்துவோம்

## 14

பெத்லகேம் நாட்டின் மாட்டுத் தொழுவத்தில்
இயேசு அவதரித்தார்

பல்லவி

எமக்காக மரி மடியில் ஏழைக்கோலம் எடுத்தார்
மண்ணோரின் பாவம் அகற்றிடவே உலகினில்
அவதரித்தார்

சரணங்கள்

1. பாவத்தில் மாண்டோரை பரனிடம் சேர்க்க
பாதகன் போல் மரித்தார்
அகதிகளான நம் பாவம் தீர்க்க
இயேசு உதித்தாரே ......எமக்காக

2. நீதி திழற்றும் நின்மலனாக
அன்புடன் அவனிதனில்
தேவசுதன் தாழ்மைக் கோலமதாய்
நீசரை தேடி வந்தார் ......எமக்காக

## 15

பல்லவி

அத்திமரம் துளிர் விடாமற் போனாலும்
திராட்சச் செடி பழம் கொடாமற் போனாலும்
ஒலிவமரம் பலனற்றுப் போனாலும்
நான் யேசுவுக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்

சரணங்கள்

1. வயல்களிலே தானியமின்றிப் போனாலும்
மந்தையிலே முதலற்றுப்போனாலும்
தொழுவத்திலே மாடுகளின்றிப் போனாலும்—நான்
யேசுவுக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்// ......அத்திமரம்

2. நதிகளிலே தண்ணீர் வற்றிப் போனாலும்
நாவரண்டு நான் மயங்கிப் போனாலும்
உடலழிந்து உயிர்பிரிந்து போனாலும்—நான்
யேசுவுக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்// ......அத்திமரம்
(ஆபகூக் 3:17, 18)

## 16

பல்லவி

நிச்சயம் முடிவு உண்டு உன்
நம்பிக்கை வீண் போகாது
கர்த்தர் வருவார் உன்னைச் சேர்ப்பார்
நீ அவரைப் பற்றும் பயத்தோடிரு

சரணங்கள்

1. உன் தாய் வயதாகும்போது
அவளை அசட்டைபண்ணாதே
உன்னைப் பெற்றத் தகப்பனுக்கு
செவிகொடு எந்நாளும் வாழ்வினிலே
சத்தியத்தை விற்காதே ......நிச்சயம்

2. நல்யோசனை செய்து யுத்தம் செய்
அநேகரால் ஜெயம் கிடைக்கும்
தீய நோக்கம் பாவமாம்
ஆபத்துக் காலத்தில் சோராதே
உன் பெலனென்றும் குறுகியது ......நிச்சயம்

3. உன் சத்துரு பசியாயிருந்தால்
புசிக்க ஆகாரம் கொடுத்துவிடு
தாகமாக இருந்துவிட்டால்
தண்ணீர் குடிக்கக் கொடுத்துவிடு
அவன் தலையில் தழல்களைக் குவித்துவிட்டால்
......நிச்சயம்

17

பல்லவி

பாரில் வந்த கோமானே
உன் பாதம் பணிவேனே
நறுமலர் தூவிடுவேன்
அன்பின் தெய்வம் நீரே

சரணங்கள்

1. பெத்லகேம் நகரினில் பாலனாய் வந்தார்
பூவின் மாந்தர்க்காகவே மன்னனாய் வந்தார் ...பாரில்

2. ஏழைக் கோலம் பூண்டீரே அன்னை மரியிடம்
தூதன் செய்தி கூறிடவே இடையரும் மகிழ்ந்தார்
...பாரில்

3. விண்ணில் தேவனுக்கே மகிமை மண்ணில் சமாதானம்
மனுஷர்மேல் பிரியமும் உரைத்தனர் தூதருமே
...பாரில்

18

1. பாவம் தீர்க்க வந்தேன்—என்
தேவனைத் தேடி வந்தேன்
அவர் நாமத்தை போற்ற வந்தேன்—எந்தன்
தேவனைக் காணவில்லை

2. நான் செய்த பாவங்களால்—உலகில்
பாவியாய் வாழ்கின்றேன்
தேவா என் கண்ணீரை பார்த்தென்
பாவத்தை மன்னித்திடும்

3. உண்மை அறியாமல்—செய்த
பாவத்தை மன்னிப்பீரா
எந்தன் குறை தீர்த்து—என்னை
ஏற்றுக்கொள்ளும் ஐயா

## 19

பல்லவி

ராஜாதி ராஜன் எமக்காக பாடு சகித்தார்
தேவாதி தேவன் இயேசு ராஜன் ஜீவனை ஈந்தார் //

சரணங்கள்

1. நம் இயேசுவுக்காய் நாமெல்லோரும்
என்னத்தைத்தான் செய்தோம்
நம் போர்க்களத்தில் இயேசுவுக்காகவே
முன் செல்வோம் // ......ராஜாதி

2. நம் விசுவாசத்தின் கூட்டத்தாராய்
எக்காலமும் ஜீவிப்போம்
மணவாளன் வரும் நேரத்தில் அவரோடு
முன் செல்வோம் // ......ராஜாதி

## 20

பல்லவி

கேளுங்கள் கொடுக்கப்படும்
என்றவரே எமக்கருள்பவரே

சரணங்கள்

1. பாசத்துடன் நாமுமது
பாதையிலே வந்திடுவோம்
நேசராஜா பேசிடுவார்
நேசமாய் என்றும் வணங்கிடுவோம் ......கேளுங்கள்

2. பாவிகளாம் எம்மிடத்தே
பாவமதைப்போக்க வந்தீர்
நாடியும்மை நாம் தொழுவோம்
நாதனே நன்றி நவில்கின்றோம் ......கேளுங்கள்

3 பாரில்தாம் பெத்தலேயில்
பாலகனாய் வந்துதித்தீர்
மார்கழியில் மாங்குளிரில்
மாமரி மைந்தனாய் அவதரித்தீர் ......கேளுங்கள்

21

பல்லவி

அன்புருவானவராம்—எம் மீட்பர்
ஆண்டவர் இயேசுபிரான்
துன்பங்கள் நீக்கிடுவார்—என்றென்றும்
தூயவர் இயேசுபிரான்

அனுபல்லவி

அன்புருவானவராம், ஆண்டவர் இயேசுபிரான்

சரணங்கள்

1. வாடிவிழும் இதழ்போல்—உலக
வாழ்வில் நிலையிழந்தே
தேடியே வந்தவர் மேல்—இறங்கி
தேற்றிடும் தேவபிரான் ......அன்புருவானவராம்

2. பாரச் சிலுவையிலே—உலக
பாரங்களைச் சுமந்தே
பாசத்தினுல் மடிந்தே—எழுந்த
நேசர் எம் யேசுபிரான் ......அன்புருவானவராம்

3. கஷ்டப்படுபவர்க்கும்—வருந்தி
பாரம் சுமப்பவர்க்கும்
ஆறுதல் நான் தருவேன்—வருந்தி
என்ற எம் இயேசுபிரான் .....அன்புருவானவராம்

22

பல்லவி

குருசினில் தொங்கிய என் இயேசு தேவா
குருதி என்மேல் பாயுதே

சரணங்கள்

1. கல்வாரி மீதில் கள்வர்களோடு
என் பாவம் போக்கவே மரித்திரே
உள்ளம் நடுங்குதே பதறிடுதே
உம் அன்பை எண்ணிடவே ......குருசினில்

2. பாவி எமக்காய் பரம்விட்டு வந்தே
பாவங்கட்காய் பலியானுரே
ஆழ்கடல் போன்ற உமதன்பையே
நினைத்தால் நன்றி பொங்குதே ......குருசினில்

8. பாவத்தினாலே அலைந்திட்ட என்னை
பரிவோடு அணைத்த உம் கிருபைக்காய்
பதிலென்ன செய்வேன் பெரும்பாவி நான்
என் உள்ளம் தான் தருவேன் .....குருசினில்

## 23

பல்லவி

அழைப்பது நான் உந்தன் இயேசுவே
ஓடி நீ வந்திடுவாய்

சரணங்கள்

1. உலகத்தின் ஆசைகள் ஒழித்திடுவாய்
ஊக்கமாய் நீயும் ஜெபித்திடுவாய்
ஜீவ பாதையைப் பற்றிப் பிடித்திடுவாய்
ஜீவன் நானே பயப்படாதே .....அழைப்பதினால்

2. சோதனைகள் உன்னைத் தாக்கினாலும்
கூட இருந்து நான் காத்திடுவேன்
ஒடுங்கி வருந்தும் பாவிகள் தஞ்சம் நான்
நித்திய சமாதானம் தருவேன் ......அழைப்பதினால்

3. பாவிகள் எவரையும் தள்ளிடேனே
உள்ளபடி உன்னை ஏற்றுக்கொள்வேன்
இரத்தாலே மீட்டுக்கொண்டேனே
உன்மேல் அன்பு கொண்டதாலே .....அழைப்பதினால்

## 24

பல்லவி

வருத்தப்பட்டுப் பாரஞ் சுமப்போனே
என்னிடம் வாரும் என்றார் இயேசு

சரணங்கள்

1. கர்த்தன் அவரன்பை கல்வாரியில்
கண்டிடாய் மகத்தான திருரத்தத்தை
பாவிகட்காகவே பரனிடம் வேண்டிடும்
அன்புள்ள யேசு அழைக்கிறாரே .....வருத்தப்

2. கலங்கிடுவாயோ உன் பாவத்தினால்
எனக்காக யாருள்ளார் என்பாயோ
கலங்காதே திகையாதே பக்கத்திலிருப்பேன்
என்றார் என் அன்புள்ள தேவபிதா .....வருத்தப்

3. சிந்திய சிலுவை இரத்தத்தினால்
கழுவினார் நீ செய்த பாவங்களை
பாவிகட்காகவே இவ்லோகம் வந்த
திவ்விய நேசனைப் போற்றிடுவோம் ......வருத்தப்

## 25

1. சிலுவை மரம் சிலுவை மரம்
சிந்தனைக்கோர் சிறந்த மரம்
சிலுவைதனை நாமெடுத்தால்
சிராக்க வல்ல மரம்—இயேசு
சிறப்பாக்கிய வல்லமை மரம்

பல்லவி

சிலுவையிலே ஜீவனுண்டு
பாவிக்கதில் பங்குமுண்டு
சிந்திய ரத்தமுமுண்டு //

2. சிலுவை மரம் சிலுவை மரம்
மோட்சத்துக்கோர் ஏணி மரம்
சிலுவைதனை நாமெடுத்தால்
சிறப்பாக்கும் புனித மரம்—யேசு
சிறப்பாக்கிய புனித மரம்

சிலுவையிலே புதுமையுண்டு
சிரமெடுத்தால் வாழ்வுமுண்டு
சிந்தித்தால் மன்னிப்புமுண்டு //

## 26

பல்லவி

இன்பாலய மணி ஓசையாய்—அன்பின்
பேரொளியாய் இயேசு அவதரித்தார்

சரணங்கள்

1. தாய் மரியாள் தவப் புதல்வனாக
இப்பாரினிலே மன்னன் அவதரித்தார்
மாட்டுத்தொழுவில் ஒளிவிளக்கேற்றி
தாலாட்டுப் பாட்டு பாடினாரே ......இன்பாலய

2. பாவிகட்காக இப்பூவுலகில்
பாதகன் என்னையும் மீட்பதற்காய்
பாவியை நோக்கி ஓடி வருவார்
அவரை நோக்கி ஜெபிக்கையிலே ......இன்பாலய

## 27

பல்லவி

யோர்தானை கடக்கும் விசுவாசியே நீ
தேவனின் சத்தத்தைக் கேட்டாயோ?
அவருன்னை வருந்தி அழைக்கிறாரே
இரட்சிப்பார் உன்னை இந்நேரமிதில்

சரணங்கள்

1. முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும்
நீயும் உன் பிள்ளைகளும் செவி கொடுத்தால்
உன் சத்தத்தைக் கேட்பார் இரங்குவார் உனக்கு
சேர்ப்பார் உன்னை அவர் மந்தையிலே ......யோர்தானை

2. உன் சிறையிருப்பை நீக்கி உனக்கு இரங்கும்
உன் தேவனாகிய கர்த்தர் அவர்
கடையான திசைமட்டும் துரத்துண்டிருந்தாலும்
உன்னைக் கூட்டிச் சேர்த்திடுவார் ......யோர்தானை

3. அவர் கற்பனைகள் பல கட்டளைகள்
முழு ஆத்துமாவோடும் இதயத்தோடும்
நீ செவி சாய்த்துக் கைக்கொண்டு மனந்திரும்பினால்
சந்தோஷமடைவார் என்றென்றுமே ......யோர்தானை

## 28

1. மானிடர்காக உலகத்தில் வந்தார்
அன்பு என்னும் படகில் ஏறி
எம்மை இரட்சித்தார்
பெத்லகேமினில் மாட்டுத் தொழுவத்தினில்
அண்ணல் இயேசு பாலனாக அவதரித்தார். //

2. "உங்களெல்லோர்க்கும் நல்ல சேதி சொல்வோம்
உலகின் ராஜா உங்களுக்காக
பெத்லகேமில் பிறந்தார்"
இந்த தூதர் வார்த்தையை
கேட்ட மேய்ப்பர்கள்
விண்மீனைத் தொடர்ந்து சென்று
பாலனைக் கண்டார்.

3. பாவிகள் எமக்காக
பரமன் தோன்றினாரே
எங்கும் மனிதன் அமைதிகொள்ள
இன்று வந்தாரே
எமக்கிரங்கும் தேவனவர்
இமைபோல் காப்பாரவர்
களிப்பு எய்தி மகிழ்ந்து பாடி
பாலனை பணிவோம். //

---

29

பல்லவி

வாலிபன் தன் வழியை—எதினால்
சுத்தம் செய்வான்—தேவ
வசனத்தால் தன் வழியை
என்றும் காத்து கொள்வதினாலே.

சரணங்கள்

1. என்முழு இருதயத்தோடும்
உம்மைத் தேடுகிறேன் என் தேவா
உம் கற்பனைகளை என்றும் விட்டு
வழிதப்பவிடாதேயும் தேவா
உமக்கு விரோதமாக நான்
பாவம் செய்யாதபடிக்குத் தேவா
உம் வாக்கை இதயத்திலே
என்றும் வைத்து வைத்தேன் தேவா ..... வாலிபன்

2. திரளான செல்வத்திலே நான்
களிகூருகின்றதுபோலே
உம் சாட்சிகளின் வழியில் நான்
களிகூருவேன் என் தேவா
கட்டளைகளை தியானித்து நான்
வழிகளை கண்ணோக்கிறேன்
மகிழ்கிறேன் கற்பனையில்
உம் வசனத்தை என்றும் மறவேன் .....வாலிபன்

(சங். : 119)

---

30

பல்லவி

என் நேசரின் அன்பை நான் என் சொல்லுவேன்
அந்தோ அவர் சத்தம் தொனித்திடுதே!

சரணங்கள்

1. பாவியான எந்தன் பாவங்களை
பாங்காய் மன்னித்தேன் என்றூர்
தூயநல் ஆவியினுல் நிறைந்தே
தூய்மையாய் இருக்கவே பணித்திட்டாரே ......என்

2. வா என்று உன்னையும் அழைக்கிருரே
உள்ளபடியே நீ வா
குருசினில் எந்தன் உதிரம் சிந்தியே
உன்னை இரட்சிக்கவே வந்தேன் என்றூர் ......என்

3. நிலையில்லா உலகத்தின் சிற்றின்பங்கள்
நிலைத்திடவே மாட்டாதே
அழிவில்லா நித்திய ஜீவனையே
அன்னித்தருவேன் என்றழைக்கிருரே ......என்

4. காலங்களை வீணுய் கழித்திடாதே
காலங்கள் பொல்லாதவை
அருள் உள்ள நாட்களில் ஆத்துமாவை
ஆதாயம் செய்யவே அழைக்கிருரே ......என்

---

31

பல்லவி

ஜீவநதிக்கரை ஓரத்திலே
அண்ணல் இயேசுவன்னை அழைக்கிருரே
பாவி நீயும் வாராயோ—அவர்
ஆவலாய் அழைக்கிருரே

சரணங்கள்

1. மனுக்குல பாவத்தைச் சுமந்தவர்
பாரினில் பலியாக மாண்டவர்
சாத்தானை வென்ற வெற்றி வேந்தர்
கிறிஸ்து மனுக்குல மாணிக்கமே ......ஜீவநதி

2. இஸ்ரவேல் அதிபதியே
கிறிஸ்து சேனையின் கர்த்தராமே
கிருபை புரியும் இராஜனே
கிறிஸ்து மகிமையின் சொரூபியாமே ......ஜீவநதி

3. கிறிஸ்துவின் இராச்சியத்திலே
ஏழையென்னையும் சேர்த்துக்கொள்வார்
கண்ணின் மணியைப் போலவே
அவர் அன்புடன் ஆதரிப்பார ......ஜீவநதி

---

## 32

பல்லவி

என் தேவா எனக்கிரங்கும்
உம் கிருபையின்படியே
உம் இரக்கங்களின்படியே
என்னை சுத்தம் செய்திடும்

சரணங்கள்

1. உமக்கொருவருக்கு விரோதமாக
பாவம் செய்தேன்—உம்
கண்கள் முன்பாக நான்
பொல்லாங்கை நடப்பித்தேன்
நீர் பேசும்போது தேவா
உம் நீதி விளங்கவும்
நியாயத்தீர்க்கையில் தேவா
இதை அறிக்கை செய்கிறேன் ......என்

2. உமக்கேற்கும் பலிகள்
நொருங்குண்ட ஆவிதான் தேவனே
நொருங்குண்ட நருங்குண்ட இதயத்தை
நீர் தள்ளவே மாட்டீர்
வேறு பலியை நீர் விரும்பீர்
என்னை தாங்கிடும் தேவா
நீதியின் பலி எதுவோ அதை
ஏற்றுக்கொள்வீர் ......என்

3. என்னைத் தள்ளாதேயும்
உம் சமூகத்திலிருந்து தேவா
பரிசுத்த ஆவியை என்னிலிருந்து
எடுத்துக் கொள்ளாதிரும்
உம் ரட்சிப்பின் சந்தோஷத்தை
எனக்கு நீர் தந்து
உற்சாகமான ஆவி என்னைத்
தாங்கும்படி செய்யும் ......என்

---

33

1. பார்த்தேன் சொரூபனை—அவர் பார்வையில் எத்தனை இரக்கம்
கேட்டேன் அவன் வார்த்தையை—அந்த வார்த்தையில் எத்தனை விளக்கம்
ஓடோடிச் சென்றேன் கர்த்தரிடம் என் பாவத்தை அறிக்கையிட்டேன்
அன்பு கனிந்த பார்வையுடன் என்னை—அணைத்துக் கொண்டார்

2. பயந்து பதறினேன்—நான் உன்னோடு இருக்கிறேன் என்றார்
திகைத்து கலங்கினேன்—நான் உன் அன்பின் தேவன் என்றார்
அவர் என்னைப் பலப்படுத்தியே சகாயம் பண்ணினார்
நீதியின் வலது கரத்தால் என்னை—தாங்கிக் கொண்டார்
கண்ணீர் சொரிந்தேன்—என் கண்ணீரை அவர் துடைத்தார்
கலங்கி அழுதேன்—என்னைத் தாயைப் போல் அணைத்தார்
தாய் தந்தை கைவிட்டாலும் உன்னை பாதுகாப்பேனே
கண்ணின் இமைபோலே என்னை—காத்து வந்தார்

---

34

பல்லவி

பாடும் மாந்தரே இந்நாளில்
அதி உன்னத பாலன் அவதரித்தார்
மங்கள நாளாம் கூடிடுவோம்
மகிழ் கொண்டாடிடுவோம்

சரணங்கள்

1. தனியிசவொரு நாள் தூதனவன்
தரிசனமானான் யோசேப்புக்கே
கலங்கிய உள்ளம் தெளிந்திடவே
மொழிந்தனனே நல்ல சேதி தனை
"பரிசுத்த ஆவியின் அருளுடையாள்
உன் மனைவியும் கர்ப்பம் தரித்திடுவாள்
இயேசு என்பாய் அப்பாலகனை
மக்கள் பாவம் நீக்கி இரட்சிப்பார்" ......பாடும்

2. "யூதேயாவின் பெத்லகேமே—நீ
யூதரின் ராஜாவின் பிறப்பிடமே"—எனத்
தீர்க்கதரிசிகளும் உரைத்தனரே—நம்
தேவனும் அங்கே உதித்தாரே
கந்தை துணி அவர் ஆடையாம்
மாட்டுக்கொட்டிலும் அவர் தொட்டிலாம்
ஏழைகள் எமக்காய் பிறந்துவிட்டார்
ஏற்றியும் நாமே துதித்திடுவோம் ......பாடும்

---

35

போற்றுவோம் பாலனை
வாழ்த்துவோம் நாதனை

பல்லவி

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா // ...போற்றுவோம்

1. அன்னை மரிதன் பாலன், புன்னகை தன்னைக் காணீர்
கன்னகளும் தேடிடும் காட்சி, வந்து நீர் காணீரோ
...அல்லேலூயா

2. நீலக் கடலின் மீனும், ஒளிரும் விண்மீனும்
மாவலைகளும் இன்று போற்றிடும் ராஜனை ...போற்று

3. பாரில் பகைமையை நீக்க பாலன் பிறந்திட்டார்
வாரும் மாந்தரே, சேர்ந்து பாடுவோம் ...அல்லே

---

36

1. எந்தன் அன்பராம் இயேசுவே
புல்லணையில் பிறந்தவரே
விண்ணனில் மேன்மை துறந்தனரே
மாந்தர் யாரும் மீட்புறவே
மீட்பரே, அன்பரே, காட்சித் தர வந்திடுவீர்

2. ஏசாயாவின் முன்னுரைப்படியே
கொட்டிலில் பிறந்தவரே
ஈசாயின் இனா வளர்ந்ததுவே
நாசரேத்தில் வளர்ந்ததுவே
பாலகா இயேசுவே காட்சி தர வந்திடுவீர்

3. மானிடரும் மீட்புறவே
ஈனக்கோலம் எடுத்தனரே
மூன்றாணிகளில் தொங்கியே
பாவியையும் மீட்டிட்டாரே
இயேசுவே பாவிக்கு காட்சி தர வந்திடுவீர்

37

பல்லவி

பிறந்தாரே, இயேசு பாலன்
இப்புவியில் மானிடனாய்
உலகின் பாவம் யாவும் போக்கும்
உத்தமர் கிறிஸ்து உதித்தாரே

சரணங்கள்

1. மன்னன் தாவீது வம்சத்திலே
அன்னை மரி தன்னிடமாய்
தூதர் சொல்லுக்கு அமைந்த வண்ணம்
துத்தியன் கிறிஸ்து அவதரித்தார் .....பிறந்தாரே

2. ஆயர் தூதர் ஞானி தேட
ஏரோது வாடி நடுங்கிடவே
பூதலத்தில் புண்ணியநாதர்
புனிதமாம் உலகினில் ஜெனித்தாரே .....பிறந்தாரே

3. வாழ்க இயேசு பாலன் வாழ்க
வாழ்க வாழ்க தேவ மைந்தன்
வாழ்க வாழ்க தேவ வார்த்தையும்
வாழ்ந்திடவே என்றும் கிறிஸ்தவமும் .....பிறந்தாரே

38

1. பூமியின் குடிகளே—எல்லோரும் கர்த்தரை
கெம்பீரமாய்ப் பாடுங்கள்
மகிழ்ச்சியோடே— கர்த்தருக்கு ஆராதனை செய்து
ஆனந்த சத்தத்தோடு முன் வாருங்கள்!

2. கர்த்தரே தேவனென் றறியுங்கள்
நாம் அல்ல அவரே நம்மை உண்டாக்கினார்
நாம் அவர் ஜனங்களும் மேய்ச்சலின் ஆடுகள்
போலவே இருக்கின்றோம்

3. வாசல்களில் துதியோடும்
பிரகாரங்களில் புகழ்ச்சியோடும்
அவரைத் துதித்து உள்ளே பிரவேசித்து
நாமத்தை ஸ்தோத்திரிப்போம்

4. கர்த்தர் நல்லவர்—ஆமென்
கிருபை என்றைக்கும் ஆமென்
அவர் உண்மை தலைமுறை தலைமுறையாக
உள்ளது அல்லேலூயா ஆமென் // (சங். 100)

39

பல்லவி

அன்பின் கருணை வடிவே—உமது
புகழ் பாடித் துதித்திடுவோம்—எந்நாளும்
பாடித் துதித்திடுவோம்

என் தேவனே, வானங்களுக்கு மேலான உயர்ந்தருளும் உமது மகிமை பூமி அனைத்தின் மேலும் உயர்ந்திருப்பதாக (சங். 57:5)

சரணங்கள்

1. வானத்தின் மீதும் பூமியின் மேலும்
மகிமையின் நாமம் தொனித்திடுதே //
இந்த மானிடர் இனமோ மகிமையை மறந்து
இருட்டினில் உறங்கிடுதே—இருட்டினில் இன்னும்
உறங்கிடுதே ......அன்பின்

வானமும் பூமியும் ஒழிந்துபோம் என்
வார்த்தைகளோ ஒருநாளும் ஒழிந்துபோவதில்லை
(மத். 24:35)

2. வானமும் பூமியும் மாறிவிட்டாலும்
வாக்கு மாறுதவர் நீரல்லவோ //
உம் வருகை நெருங்குமுன் உறக்கம் தெளிந்து நாம்
விழித்திட அருள்புரிவாய்—விழித்திட இன்றே அருள்
புரிவாய் ......அன்பின்

## 40

பல்லவி

மாமலை மீதிலே வாழும் தூயோனாய்
பூமி மீதில் இரக்கம் உள்ளோர் வாழ்பவர் பாக்யவான்

சரணங்கள்

1. சாந்த குணமுள்ளோர் பாக்யவான்
பரலோக ராஜ்யத்தை அரசாளுவான்
நெஞ்சில் உரம் உள்ளோர் மேன்மையடைவாரே
என்றாரே இயேசுவே ......மாமலை

2. நீதி வழுவாதோர் பாக்யவான்
நெஞ்சில் இரங்குவோர் பாக்யவான்
தூய இதயத்தோர் காண்பார் தரிசனம்
என்றாரே இயேசுவே ......மாமலை

## 41

பல்லவி

இறைவா எனக்கோர் வரம் வேண்டும்
நிறைவாய் நின்பதம் பெறல் வேண்டும்
வாழ்வின் வழியாய் நீ வேண்டும்
வாழ்வின் முடிவாய் நீ வேண்டும் ......இறைவா

சரணங்கள்

1. அமைதி நிறைந்திடும் உலகம் நீ—அன்பு
வாழும் கோயில் நீ
என்னில் நிறைந்திடும் தெய்வம் நீ
என்றும் மறவா தாயும் நீ ......இறைவா

2. உலகின் இன்பம் போதாது
உயர்ந்த வாழ்வும் போதாது
உண்மை அடைந்து உள்ளத்தில்
உண்மை அருளே வாழ்ந்திடுவேன் ......இறைவா

3. என்ன சொல்லி நானழைப்பேன்
என்ன மொழியில் வேண்டிடுவேன்
எளிமையில் உன்னிடம் பேசிடுவேன்
உமதருள் பெறும்வரை காத்திருப்பேன் ......இறைவா

## 42

1. கானகப் பாதை காடும் மலையும்
காரிருளே சூழ்ந்திடினும்
மேகஸ்தம்பம் அக்கினி தோன்றும்
வேகம் நடந்தே முன் செல்லுவாய்.

பல்லவி

பயப்படாதே கலங்கிடாதே
பரமன் யேசு காத்திடுவார்
பரம கானான் விரைந்து சேர்வாய்
பரமனோடென்றும் வாழ்ந்திடுவாய்.

2. கடலைப் பாரும் இரண்டாய் பிளக்கும்
கட்டமாய் சென்றே கடப்பாய்
சத்துரு சேனை மூழ்கி மாளும்
ஜெயம் சிறந்தே முன் செல்லுவாய்

3. கொடுமை யுத்தம் உன்னை மடக்கும்
கோரப் போர் தான் வந்தெதிர்க்கும்
தாங்கும் கர்த்தர் ஓங்கும் கையால்
தூக்கி சுமப்பார் முன் செல்லுவாய்.

---

## 43

பல்லவி

வாழ்வை அளிக்கும் பாலகா
பாரில் வந்துதித்தார்
வாழ்வின் ஒளியை ஏற்றவே
எழும்பி வாராரோ.

சரணங்கள்

1 எளிந்த இந்த பாசமே மாந்தரெம்மிடமே
புல்லணை தான் உன் மெத்தையோ ஆரீராராரோ.

2. ஆயர் கூடி வாழ்த்தியே பாடி மகிழ்ந்தாரே
பாலர் தாமும் கூடியே போற்றிப் புகழ்வோமே.

3. அன்பு ஒன்றைக் கேட்கிறார் அதையே தருகிறோம்
இதயத்தன்பு யாவையும் உமக்கே அளிக்கிறோம்..

---

## 44

1. அல்லேலூயா கர்த்தரையே ஏகமாய்த் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல்களெல்லாம் பார்த்தோரே
துதியுங்கள்
வல்லமையாய் கிரியை செய்யும் வல்லோரைத்
துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும் இயேசுவைத்
துதியுங்கள்

பல்லவி

ராஜாதி ராஜனும் ஏசுராஜன்
பூமியில் ஆட்சி செய்வார்
அல்லேலூயா அல்லேலூயா
தேவனைத் துதியுங்கள்

2. தம்பூரோடும் வீணையோடும் கர்த்தரைத் துதியுங்கள்
இரத்தத்தினால் காயங்களை போக்கினார் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும் முழங்கிட துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர் ஏசுவைத் துதியுங்கள்

3. சூரியனே சந்திரனே தேவனைத் துதியுங்கள்
ஒளியதனை எங்கள் உள்ளம் அளித்தோரைத் துதியுங்கள்
அக்கினியே கல்மழையே படைத்தோரைத் துதியுங்கள்
அக்கினியாய் கல்மனதை உடைப்போரைத் துதியுங்கள்

4. பிள்ளைகளே வாலிபரே தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்துநீர் துதியுங்கள்
பெரியவரே பிரபுக்களே தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை ஏசுவுக்காய் செலுத்தியே துதியுங்கள்

5. ஆழ்கடலே சமுத்திரமே தேவனைத் துதியுங்கள்
அலையலையாய் ஊழியர்கள் எழும்பினார் துதியுங்கள்
தூதர்களே முன்னோடிகளே தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தை மீட்கப்பட்டோர் நிரப்புவார் துதியுங்கள்

---

## 45

பல்லவி

பாவியாகவே வாரேன்
பாவம் போக்கும் பலியாம்
என் யேசுவே வாரேன்//

சரணங்கள்

1. நீ வா உன் பாவம் என்னால்
நீங்கும் என்று சொன்னீரே
தேவா உம் வாக்கை நம்பி
சீர்கேடன் நீசனும் நான் ......பாவி

2. துன்பங்கள் நீக்கி உன்னை
தூக்கிய வைப்பேன் என்றீர்
இன்ப வாக்குத்தத்தத்தை
இன்றைக்கே நம்பியே நான் .....பாவி

3. உம்மைச் சேர வொட்டாமல்
ஊன்றிய தடை யாவும்
உம்மன்பால் நீங்கி நல்
உயிரடைந்தோங்கவே நான் .....பாவி

## 46

பல்லவி

ஏனிந்த பாடுதான் சுவாமி
என்ன தருவேன் இதற்கீடு நான்

அனுபல்லவி

ஆனந்த நேமியே என்னை
ஆளவந்த குருசாமியே......ஏ

சரணங்கள்

1. கெத்சமனேயிடம் ஏகவுமதின்
செழுமலர்க் காவிடைப் போகவும்
அட்சயனே மனம் நோகவும் சொல் //
அளவில்லா துயரம் ஆகவும் ......ஏனிந்த

2. அப்பா பிதாவே என்றழைக்க
துயரகல செய்யும் என்றுரைக்க
செப்பும் உன் சித்தம் என்று சாற்றவும் //
ஒரு தேவதூதன் வந்து தேற்றவும் ......ஏனிந்த

## 47

1. இருள் சூழும் காலம் இனிவருதே
அருள் உள்ள நாட்கள் பயன்படுத்தும்
திறவுண்ட வாசல் அடைபடுமுன்
நொருங்குண்ட மனதாய் முன்செல்வோர் யார்

பல்லவி

திறவுண்ட வாசல் அடைபடுமுன்
நொருங்குண்ட மனதாய் முன்செல்வோர் யார்
நாட்கள் கொடியதாய் மாறிடுதே
காலத்தை ஆதாயம் செய்திடுவோர்

3. விசுவாசிகள் என்னும் கூட்டம் உண்டு
அன்பு ஒன்றே அவர் நடுவில் உண்டு
ஒருமனம் ஒற்றுமை அங்கு உண்டு
என்று சொல்லும் நாட்கள் இன்று வேண்டும்

4. இயேசுவே எங்கள் உள்ளங்களை
அன்பெனும் ஆவியால் நிறைந்திடுமே
உலகத்தின் எல்லா திசைகளிலும்
இயேசுவின் நாமமும் விரைந்திடுமே

## 48

பல்லவி

திருப்பாதம் நம்பி வந்தேன்
கிருபை நிறை இயேசுவே
தமதன்பை கண்டடைந்தேன்
தேவ சமூகத்திலே

சரணங்கள்

1. இளைப்பாறுதல் தரும் தேவா
களைத்தோரைத் தேற்றிடுமே
சிலுவை நிழல் என்தன் தஞ்சம்
சுகமாய் அங்கு தங்கிடுவேன் ......திருப்பாதம்

2. என்னை நோக்கி கூப்பிடு என்றீர்
இன்னல் துன்ப நேரத்திலும்
கருத்தாய் விசாரித்து என்றும்
கனிவோடென்னை காத்திடுமே ......திருப்பாதம்

3. என்னை கைவிடாதிரும் நாதா
என்ன நிந்தை நேரிடினும்
உமக்காக யாவும் சகிப்பேன்
உமது பெலன் ஈந்திடுமே

## 49

1. நமது இயேசுகிறிஸ்துவின் நாமம்
நானிலம் எங்கும் ஓங்கிடவே
புனிதமான பரிசுத்த வாழ்வை
மனிதராம் எமக்களித்தார்

பல்லவி

தேவகிருபை எங்கும் பெருக
தேவனை ஸ்தோத்திரிப்போம்
பாவ இருள் அகல தேவ ஒளி அடைந்தோம்

2. அவரை நோக்கி கூப்பிடும் வேளை
அறிவிப்பாரே அற்புதங்கள்
எனக்கு பாதை அறிந்திடா வேளை
எத்தனையோ பதில் அளித்தார் ......தேவகிருபை

3. பரமன் இயேசு வந்திடும் வேளை
பறந்து நாமும் சென்றிடுவோம்
பரமனோடு நீடூழி வாழும்
பரம பாக்கியம் பெறுவோம் ......தேவகிருபை

## 50

பல்லவி

அழைக்கும் தெய்வம் இயேசுவைப்பார்—உன்
அன்பைக் கேட்கும் நேசரைப் பார் உன்னைத்
தாவியே அணைத்திடவே அவர்
எடுத்த கோலம் சிலுவையில் பார் அவர்//

சரணங்கள்

1. பாவிக்கு ஜீவ ஊற்றானார்—இந்த பாருக்கு ஜீவ வழியானார்
நேசர் அன்பு வழி சென்றிடுவாய் அவர்
அழைப்பை ஏற்றுக்கொண்டிடுவாய் ......அழைக்கும்

2. காயங்களால் வழிதிறந்தார்—அன்று
கல்வாரியிலே உயிர் துறந்தார்
நீசன் உன்னை சேர்த்திடவே அன்று
நேசனாக உயிர்த்தெழுந்தார்

## 51

1. நெஞ்சமே வீணாய் சோர்ந்து போகாதே
தஞ்சம் யேசு இருக்கையில் தளர்ந்துவிடாதே
வஞ்சகர் வீசும் வலையில் விழாதே
பஞ்சகாயன் உன்னைப் பாதுகாப்பாரே

2. சோதனை பலவும் சூழ்ந்திடும் நேரம்
வேதனை விதம் விதம் வந்திடும் காலம்
தீதனைத்தும் திருச் சிலுவையில் தொங்கும்
நாதனை நினைந்திடில் நாசமாய்ப் போகும்

3. கஷ்டங்கள் வருங்கால் களிப்பாக எண்ணு
இஷ்டமுடன் ஜெபம் எந்நேரம் பண்ணு
நஷ்டங்கள் வந்தாலும் நலமென்று சொல்லு
துஷ்டனின் சூழ்ச்சியை தூயனாய் வெல்லு

4. நியாயமில்லாமல் தோற்றம்காண்போர்கள்
நியாயத்தீர்ப்பின் நாளில் வெட்கம் கொள்வார்கள்
தூயவன் முன் உன் சிறு இருதயம்
மாயமும் மாசும் இல்லாதானால் போதும்

5. இயேசுவின் சிந்தை இருந்திட வேண்டும்
இயேசுவின் ஆவியால் இயங்கிட வேண்டும்
இயேசுவைப் போல் எல்லாம் சகித்திட வேண்டும்
இயேசுவின் கிருபையைப் பெற்றிட வேண்டும்

---

## 52

பல்லவி

ஆவியை அருளுமே சுவாமி—எனக்கு
காயுயிர் கொடுத்த வானத்தின் அரசே

சரணங்கள்

1. பாவிக்கு ஆவியின் கனியெனுஞ் சிநேகம்
பரம சந்தோஷம் நீடிய சாந்தம்
தேவசமாதானம் நற்குணம் தயவு
திட விசுவாசம் சிறிதேனும் இல்லை

2. தீபத்துக் கெண்ணெயைச் சீக்கிரம் ஊற்றும்
திரியவியாமலே தீண்டியே ஏற்றும்
பாவ அசுசங்கள் விலக்கியே மாற்றும்
பரிசுத்த வரந் தந்தென் குறைகளைத் தீரும்

3. நற்கனி தேடிவருங் காலமல்லவோ
நானொரு கனியற்ற பாழ்மர மல்லவோ
முற்கனி முகங்காணு வெம்பயிரல்லவோ
முழு நெஞ்சம் விளைவற்ற உவர் நிலமல்லவோ

---

53

பல்லவி

பாவி நான் என்ன செய்வேன்—கோவே
ஜீவன் நீர் விட்டதற்காய் ஆ......ஆ //

அனுபல்லவி

தேவநேசத்தினல் மேவி சிலுவையில்
தாவி உயிர்விட்டு ஜீவித்ததெனக்கல்லோ ......பாவி

சரணங்கள்

1. நாடி என்னைத் தயவாய் குணம் செய்ய
தேடி வந்தீரரசே
ஆடுகளுக்காக நீடி உயிர்தர
பாடுபட்டு குரு சூடுறந்தீரன்றோ ......பாவி

2. வாரால் அடிக்கப்பட்டு குட்டுண்டு
வாதை பட்டெண்ணம் மட்டாய்
சீரா மனுடாவ தாரா சருவாதி
காரா பரமகுமரா ஓலோலமே ......பாவி

54

பல்லவி

வா பாவி மலைத்து நில்லாதே வா!

சரணங்கள்

1. என்னிடத்தில் ஒரு நன்மையுமில்லையென்
றெண்ணித் திகையாதே
உன்னிடத்தில் ஒன்றுமில்லையறிவேனே
உள்ளபடி வாவேன் ......வா

2. கொடிய பாவத் தழலில் விழுந்து
குன்றிப் போனாயோ
ஒடுங்கி வருந்தும் பாவிகள் தஞ்சம் நான்
ஒன்றுக்கும் அஞ்சாதே வா! ......வா

3. என்னிடத்தில் வரும் பாவி எவரையும்
இகழ்ந்து தள்ளேனே
சிலுவை பாவிகள் அடைக்கலமல்லோ
சீக்கிரம் ஓடி வாவேன் ......வா

## 55

பல்லவி

குருசினில் தொங்கியே குருதியும் வடிய
கொல்கொதா மலைதனிலே—நம்
குருயேசு சுவாமி கொடுந்துயர் பாவி
கொள்ளாய் கண்கொண்டு

சரணங்கள்

1. சந்திர சூரிய சகலவான் சேனைகள்
சகியாமல் நாடுதையோ—தேவ
சுந்தர மைந்தன் உயிர்விடுங் காட்சியால்
துடிக்கா நெஞ்சுண்டோ ......குருசினில்

2. எருசலேம் மாதே மருகி நீயழுது
ஏங்கிப் புலம்பலையோ—நின்
எருசலையதிபன் இளமணவாளன்
எடுத்த கோலமிதோ? ......குருசினில்

## 56

1. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
யாவையும் தாராளமாய்
என்றும் அவரோடு தங்கி
நம்பி நேசிப்பேன் மெய்யாய்

பல்லவி

ஒப்புவிக்கிறேன் ஒப்புவிக்கிறேன்
நேச ரட்சகா நான் யாவும்
ஒப்புவிக்கிறேன்

2. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
அவர் பாதம் பணிந்தேன்
உலக இன்பம் யாவும் விட்டு
இப்போதேற்றுக்கொள்ளுவேன்

3. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
ஏற்றுக்கொண்டருளுமே
நான் உம் சொந்தம் நீர் என் சொந்தம்
சாட்சி என்றும் கூறுவேன்

## 57

பல்லவி

என்னை மறவா இயேசு ராஜா
உந்தன் தயவால் என்னை நடத்தும்

சரணங்கள்

1. வல்ல ஜீவ வாக்குத்தத்தங்கள்
வரைந்தெனக்காய் ஈந்ததாலே ஸ்தோத்திரம்
ஆபத்திலே அருந்துணையே
பாதைக்கு நல்ல தீபமிதே ......என்னை

2. தாய்தன் சேயை மறந்துவிட்டாலும்
மறவேன் உன்னை என்றதாலே ஸ்தோத்திரம்
வரைந்திரன்றோ உம் உள்ளங்கையில்
உன்னதா என்றன் புகலிடமே ......என்னை

## 58

பல்லவி

தேவா பிரசன்னம் தாருமே
தேடி உம் பாதம் தொழுகிறோம்
இயேசுவே உம் திவ்ய நாமத்திலே
இன்பமுடன் கூடி வந்தோமே

சரணங்கள்

1. கர்த்தர் செய்த உபகாரங்கள்
கணக்குரைத் தென்னலாகுமோ
இரட்சிப்பின் பாத்திரம் கையிலேந்தி
இரட்சகரை தொழுகிறோம் ......தேவா

2. வானம் உமது சிங்காசனம்
பூமி உமது பாதஸ்தலம்
பணிந்து குனிந்து தொழுகிறோம்
கனிந்தெம்மை கண்பாருமே ......தேவா

3. எப்போ வருவீர் என் இயேசுவே
ஏங்கி உள்ளம் உம்மைத் தேடுதே
பறந்து விரைந்து தீவிரமே
இறங்கி வாரும் இயேசுவே ......தேவா

## 59

1. ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச் செய்தீர்

பல்லவி

ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கிதுவே சட்டம்
ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கிதுவே சட்டம்

2. ஊக்கத்துடனே ஓர் முகமாய்
வாக்குத்தத்தத்தை பற்றிக்கொண்டு
நோக்கத்தையெல்லாம் நேர்மையாக்கி
காக்கும்படி கிருபை செய்யும் ......ஜெபமே

3. இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீக்கிவிடும்
சடைப்பில்லாமல் நீசன் பாதம்
கடைசிமட்டும் காத்திருப்போம் ......ஜெபமே

## 60

பல்லவி

ஆனந்தமாய் இன்பகானான் ஏகிடுவேன்
தூயபிதாவின் முகம் தரிசிப்பேன்
நாளுக்குள் நான் அற்புதமாய் என்னைத் தாங்கிடும்
நாதன் இயேசு என்னோடிருப்பார் ......ஆனந்தமாய்

சரணங்கள்

1. சேற்றினில் என்னை தூக்கியெடுத்து
மாற்றியுள்ளம் புதிதாக்கினரே
கல்லான என் உள்ளம் உருக்கிடும் கல்வாரியை
கண்டு நன்றியுடன் பாடிடுவேன் ......ஆனந்தமாய்

2. உம்மைப்பின் சென்று ஊழியம் செய்து
உம்பாதம் சேர வாஞ்சிக்கிறேன்
தாரும் தேவா ஏழைக்கும் மாறாத உம் கிருபை
கண்பாரும் என்றும் நான் உம் அடிமை......ஆனந்தமாய்

61

பல்லவி

பாவிக்கு புகலிடம் இயேசு ரட்சகர்
பாரினில் பலியாக மாண்டாரே
பரிசுத்தரே பாவமானாரே
பாரமான சிலுவை சுமந்தவரே

சரணங்கள்

1. காட்டிக் கொடுத்தான் முப்பதுவெள்ளி
காசுக்காகவே கர்த்தர் இயேசுவை
கொலை செய்யவே கொண்டு போனாரே
கொல்கொதா மலைக்கு இயேசுவை // ......பாவிக்கு

2. கால்கள் கைகளில் ஆணி பாய்ந்திட
கிரீடம் முற்களில் பின்னி சூடிட
இரத்த வெள்ளத்தில் கர்த்தர் தொங்கினார்
இதை காணும் உள்ளம் தாங்குமோ // ..... பாவிக்கு

62

பல்லவி

ஐயையா நான் வந்தேன்—தேவ
ஆட்டுக்குட்டி வந்தேன் //

சரணங்கள்

1. துய்யன் நீர் சோரி பாவிகட்காய் சிந்தித்
துஷ்டன் என்னை அழைத்தீர்—தயை
செய்வோம் என்றே இதை அல்லாது போக்கில்லை
தேவாட்டுக்குட்டி வந்தேன் ......ஐயையா

2. எண்ணம் வெளியே போராட்டங்கள் பயம்
எத்தனை எத்தனையோ—இவை
திண்ணம் அகற்றி என்னையும் இரட்சியும்
தேவாட்டுக்குட்டி வந்தேன் ......ஐயையா

3. ஏற்றுக்கொண்டு மன்னிப்பை அளித்து
என்னை அரவணையும்—மனம்
தேற்றிக்கொண்டேன் உம் வாக்குத்தத்தங்களால்
தேவாட்டுக்குட்டி வந்தேன் ......ஐயையா

63 ✓

பல்லவி

ஆத்துமமே என் முழு உள்ளமே—உன்
ஆண்டவரை தொழுதேற்று //
இந்நாள்வரை அன்பு வைத்தாதரித்த—உன்
ஆண்டவரை தொழுதேற்று

சரணங்கள்

1. போற்றிடும் வானோர் பூதலத்துள்ளோர்
சாற்றுதற்கரிய தன்மையுள்ள // ......ஆத்துமமே

2. தலைமுறை தலைமுறை தாங்கும் விநோத
உலகம் முன் தோன்றி ஒழியாத // ......ஆத்துமமே

3. துதி மிகுந்தேறத் தோத்திரத் தினமே
இதயமே உள்ளமே என் மனமே // ......ஆத்துமமே

---

64

பல்லவி

தொழுகிறோம் எங்கள் பிதாவே
பொழுதெல்லாம் ஆவி உண்மையுடனே
பரிசுத்த அலங்காரத்துடனே
தரிசிப்பதினால் சரணம் சரணம் //

சரணங்கள்

1. வெண்மையும் சிவப்புமானவர்
உண்மையே உருவாய்க் கொண்டவர்
என்னையே மீட்டுக்கொண்டவர்
அன்னையே இதோ சரணம் சரணம்......தொழுகிறோம்

2. அடியார்களின் அஸ்திபாரம்
அறிவுக்கெட்டாத விஸ்தாரம்
கூடிவந்த எம்மலங்காரம்
கோடா கோடியாம் சரணம் சரணம்......தொழுகிறோம்

## 65

பல்லவி

தேவாதி தேவன் ராஜாதி ராஜன்
பாவ உலகினில் வந்துதித்தார்
ஏரோது மாளிகை தேடாத மாறுத
ஏழைத் தொழுவத்தில் ஜெனித்தவர்

சரணங்கள்

1. வானத்தில் தோன்றும் ஓர் நட்சத்திரம்
வான சாஸ்திரிகள் முன் சென்றாலும்
பாதை தவறி சோக மடைந்தபின்
பாலகன் இயேசுவைக் கண்டடைந்தார் ......தேவாதி

2. அன்னை மரியாள் அளவில்லாத
ஆசீர்வாதங்கள் மிக அடைந்தும்
அந்தக் கிருபைகள் சொந்தமுடன் பெற
ஆண்டவர் இயேசுவைக் கண்டடைவார் ......தேவாதி

3. சத்திரத்திலே ஸ்தலமில்லையே
சத்திய தேவன் தலை சாய்க்கவே
தாழ்மை சொரூபி தாழ இறங்கியே
தங்கும் தொழுவத்தைக் கண்டடைவார் ......தேவாதி

## 66

1. கர்த்து குளிரப் பாடுங்கள் கிருபா சத்தியம்
புத்தி தெளியக் காட்டுங்கள் திவ்விய வசனம்
வெல்க சத்திய வேதம் வாழ்க சத்திய வேதம்

பல்லவி

அமிர்தமே அற்புதமே
திவ்விய சத்தியம்
அமிர்தமே அற்புதமே
திவ்விய வசனம்

2. நல்ல செய்தியைக் கூறுமே கிருபை சத்தியம்
பாவ நாசத்தைக் காட்டுமே திவ்விய வசனம்
வான வருஷ மாரி ஞான பொக்கிஷவாரி ...அமிர்தமே

3. வேத நாயகர் பொழியும் கிருபை சத்தியம்
ஜீவ மங்களம் மொழியும் திவ்விய வசனம்
யேசு மீட்பரைக் காட்டும் இரட்சணிய வழியை காட்டும்
...அமிர்தமே

## 67

1. பிளவுண்ட மலையே, புகலிடம் தாருமே
பக்கம் பட்ட காயமும் பாய்ந்த செந்நீர் வெள்ளமும்
பாவதோஷம் யாவையும் நீக்கும்படி அருளும்

2. கண்ணீர் நித்தம் சொரிந்தும் கஷ்டத் தவம் புரிந்தும்
பாவம் நீங்க மாட்டாதே நீரே மீட்பர் ஏசுவே
செந்நீர்ப்பட்ட சிலுவை சேருவேன் உன் தஞ்சமே

3. நிழல் போன்ற வாழ்விலே கண்ணை மூடும் என் சாவிலே
இகம் விட்டுப் பரத்தில் நடுத்தீர்வைத் தினத்தில்
பிளவுண்ட மலையே புகலிடம் தாருமே

---

## 68

பல்லவி

வரவேண்டும் பரனாவியே
இறங்குஞ் சுடராய் மேவியே
மருளாம் பாவம் மருவிய எனக்கு
வானுக்கினியால் ஞானதீட்சைத் தர

சரணங்கள்

1. பலமான எப்பாவமும் பாழாக்கும் மா நோய்களும்
வலிய கொடும் ரோகமும் மாம்ச சிந்தையோடுமே
பலிபீடத்தில் என்னைப் பலியாக வைத்தேன்
எளியாளின் ஜெபத்திற்கிரங்கிய வண்ணம் ......வர

2. என்றன் பாவம் யாவையும் எரிக்கும் வகை தேடியும்
எங்கும் இந்த லோகத்தில் எத்தீயுமே காணகிலேன்
என்றன் செயலால் யாதொன்றும் முடியா
நின்றே வானுக்கினி வரவேண்டும் ......வர

## 69

பல்லவி

வல்லவரே இயேசு நல்லவரே
மிக அன்பு மிகுந்தவரே—இயேசு
வல்லவரே அவர் நல்லவரே,
உனக்காகவே ஜீவிக்கிறார்

சரணங்கள்

1. ஜீவனின் ஊற்றுமே இயேசுபரன்
தீர்த்திடுவார் உன்தன் பாவங்களை
பாவங்கள் ரோகங்கள் சாபங்கள் போக்கிட
பரிவாய் அழைக்கிறார் ......வல்லவரே

2. பரனின் அன்பதை அகத்திலே
சொரிந்து தன் திரு ஆலயமாய்
மாற்றியே தம்மைப்போல் தேவசாயலாக்கி
மகிமை சேர்த்திடுவார் ......வல்லவரே

3. வியாதியினால் நொந்து வாடுவதேனோ
நேயன் கிறிஸ்து சுமந்ததனை
சிலுவை மீதினில் தீர்த்ததாலே இனி
சுகமடைந்திடுவாய் ......வல்லவரே

## 70

பல்லவி

இயேசுவின் அன்புதான் (நித்தியமாம் ///
இயேசுவின் நாமமே (மதுரமாம் ///

சரணங்கள்

1. ஜோதியில் வாழும் மன்னவனே
நீதி அன்பு நிறைந்தவனே
ஆதி மகிமையில் ஆகிட மானிடர்
மேதினியில் வந்து தாம் உதித்தார்—இயேசு

2. ஆதரின் சேவையைத் தான் மறந்து
நாதர் இயேசுவின்னிலைத் துறந்து
பூதலத்தில் மனுவேலனாய்ப் பிறந்து
பாதகரை மீட்க பாசங்கொண்டார்

3. இந்த பாரில் இயேசுவுக்கு
சொந்தம் யாதொன்றும் இல்லையாயினும்
எந்தனே தமக்கே சொந்தமாக்கிடவே
நிந்தனேயும் ஏற்கும் சித்தம் கொண்டார்

4. நோய் பிணியாளிகளுக்கு இரங்கி
பேயின் கட்டுகள் தகர்த்தெறிந்தார்
சேய்மீது கொண்டிடும் தாயன்பினும் மேலாய்
நேயன் நீசர் நம்மைத்தாம் நேசித்தார்

5. கொல்கொதாவின் கோரமாம் குருசில்
சொல்லொணு வேதனேகள் தாம் சகித்து
வல்லவன் தம் தூய இரத்தத்தை சிந்தியே
எல்லோரையும் மீட்கும் பலியானுர்

---

## 71

பல்லவி

குருவே உந்தன் பாதம் தன்னே
கும்பிட்டேன் இதோ வணங்கி நின்ருேம்

சரணங்கள்

1. மருவே உந்தன் மலரடிதன்னே
மனதில் நாங்கள் பூஜித்தோமே
வருவீர் வருவீர் வருவீர் வருவீர் ......குருவே

2. இச்சபையினில் எவரும் போற்றும்
துணே நீரல்லோ ஐயா தேசிகா
அடியார் சரணம் சரணம் சரணம்

---

## "சத்திய வசனம்"

த. பெ. 1012, கொழும்பு.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆசிய சேவையில் 25, 49 ஆகிய அலைவரிசைகளில் கொடுக்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| *ஞாயிறு | ...... | மாலை 6. 15 | பிரசங்கநிகழ்ச்சி |
| திங்கள் | ...... | மாலை 6. 15 | திருமறைப்பாடம் |
| செவ்வாய் | ...... | மாலை 6. 15 | திருமறைப்பாடம் |
| புதன் | ...... | மாலை 6. 15 | திருமறைப்பாடம் |
| வியாழன் | ...... | மாலை 6. 15 | வாலிபர்சோலை |
| வெள்ளி | ...... | மாலை 6. 15 | மாதர்நிகழ்ச்சி (3)<br>சிறுவர்பூங்கா (1) |

*மாதத்தின் முதல் ஞாயிறன்று, ஆராதனை ஒலிபரப்பு!

சத்திய வசனம்
தபால் பெட்டி 1012,
கொழும்பு, இலங்கை.

Printed by Harold Newton Krasse, of 32. Coopers Hill Colombo 3, at Eidor Printers, 1700, Cotta Road, Rajagiriya, for the Back to the Bible Broadcast, No. 15, Melbourne Avenue, Colombo 4.